செ.வெ.எண்: 55/மே நாள்: 31.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## வேளாண்மைத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி, ஆர்.எஸ்.மங்கலம், இராமநாதபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் இன்று (31.05.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மைத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம் கிராமத்தில் வேளாண் கருவிகள் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் தமிழக அரசின் மூலம் மொத்தம் ரூ.10 இலட்சம் மானியம் பெற்று திரு.திருமுருகன் என்பவர் செயல்படுத்தி வரும், விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வாடகைக்கு வேளாண் கருவிகள் வழங்கும் மையத்தினை பார்வையிட்டார். இம்மையத்தில் வேளாண் பணிகளுக்கு அத்தியாவசியமாகிய ரோட்டா வேட்டர், பவர் டில்லர் உள்ளிட்ட பல்வேறு வேளாண் கருவிகள் உள்ளன. இம்மையத்தின் மூலம் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், தினைக்குளம் கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.3.84 இலட்சம் அரசு மானியம் பெற்று திரு.ஜவாஹீர் என்பவர் செயல்படுத்தி வரும் சூரிய ஒளி மின்சக்தியின் மூலம் இயங்கும் மோட்டார் பம்ப் செட்டுகளைப் பார்வையிட்டார். அதே போல ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகன்கோட்டை மற்றும் கொத்திடல் ஆகிய கிராமங்களில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குளம் வெட்டும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் வண்ணான்குண்டு, திருப்புல்லாணி ஆகிய பகுதிகளில் நபார்டு திட்டத்தின் கீழ் தலா ரூ.21 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, தொடர்ந்து இராமநாதபுரத்தில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.59 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் விந்தணு வங்கியின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் போது வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.வீ.கிருஷ்ணமூர்த்தி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.பி.ராமசாமி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.குருதிவேல்மாறன் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வெள்ளைச்சாமி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**